**செய்தி வெளியீடு எண்: 126** **நாள்: 20.02.2018**

## செய்தி வெளியீடு
## "சென்னை அறிவியல் விழா 2018"

அறிவியல் நகரம் தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் கீழ் இயங்கும் அமைப்பாகும். அறிவியல் நகரத்தின் முக்கிய குறிக்கோள் மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். இதன் அடிப்படையில் அறிவியல் நகரம் தமிழகத்திலேயே முதன் முறையாக "சென்னை அறிவியல் விழா" என்ற உன்னதமான நிகழ்ச்சியை 2008 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. இந்த விழாவின் முக்கிய குறிக்கோள் மாணவர்களுக்கிடையே அறிவியல் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்கள் அன்றாட வாழ்வில் நடக்கும் நிகழ்வுகளில் உள்ள அறிவியல் பின்னனியை – உண்மையை எடுத்துக் கூறி அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்துவதாகும்.

பதினோறாவது ஆண்டாக இந்த வருடமும் சென்னை அறிவியல் விழா 2018 பிப்ரவரி திங்கள் 21 ஆம் தேதி முதல் பிப்ரவரி திங்கள் 24 ஆம் தேதி வரை அறிவியல் நகர வளாகத்தில் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற பொருளில் நடைபெற உள்ளது.

சென்னை அறிவியல் விழாவின் முக்கிய அம்சம் பிரம்மாண்டமான அறிவியல் கண்காட்சி ஆகும். இக்கண்காட்சியில் எரி சக்தி, மருத்துவம், பொது அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய துறைகளில் 40க்கும் மேலான கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு தமிழகம் மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் காட்சிப் பொருட்களை வைத்து இக்கண்காட்சிக்கு வருகை தருபவர்களுக்கு அறிவியல் விழிப்புணர்வை ஏற்படுத்துவர்,

இவை மட்டுமல்லாமல் இவ்வரங்கில் 60 க்கும் மேற்பட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களின் அறிவியல் வடிவமைப்புகள் இடம் பெறுகின்றது. பிரபல அறிவியல் விரிவுரைகள் மற்றும் குழு விவாதங்கள் அறிவியலாளர்களால் வழங்கப்பட உள்ளது.

இவ்வரிய அறிவியல் விழாவினை முனைவர் இரா. பழனிசாமி, இ.ஆ.ப., ஆணையர், தொழில்நுட்ப கல்வி இயக்ககம், சென்னை அவர்கள் விழாவை துவக்கி வைத்து சிறார் அறிவியல் அகாடமி விருதுகளை வழங்கி உரையாற்றுவார்.

இவ்வறிவியல் விழாவின் நோக்கம் வருகை தருபவர்களுக்கிடையே அறிவியல் விழிப்புணர்வையும் அறிவியல் எண்ணங்களையும் ஏற்படுத்துவதாகும். கடந்த ஆண்டுகள் நடத்தப்பட்ட விழாக்களின் வெற்றியே இதற்கு சான்றாகும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**